# 22.06.2026 செய்திகள்

## 3 அதிநவீன போர்க்கப்பல்கள் இணைப்பு

» சிறப்பம்சங்கள்

- ஐ.என்.எஸ்., துனகிரி : பிரிகேட் ரக போர்க்கப்பல், புராஜெக்ட் 17 ஏ பிரிவின் கீழ் உருவான ஐந்தாவது அதிநவீன ஸ்டெல்த் போர்க்கப்பல், எதிரிகளின் இலக்குகளை துல்லியமாக தாக்கும் பிரம்மோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணைகளை மற்றும் நடுத்தர தூரவான் பாதுகாப்பு ஏவுகணைகளை கொண்டது.
- ஐ.என்.எஸ்.,அக்ரே : நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல் வகையை சேர்ந்தது. இலகுரக டார்பி டோக்கள், உள்நாட்டு ராணுவ ஏவுகணைகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. கடலோர பகுதிகளில் நீருக்கடியில் இருக்கும் அச்சுறுத்தல்களை கண்டறிந்து தாக்கும் திறன் கொண்டது.
- ஐ.என்.எஸ்.,சன்ஷோதக் : ஆழ்கடல் நீரியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் இந்த கப்பல் வடிவமை க்கப்பட்டுள்ளது. கடலியல் மற்றும் புவி இயற்பியல் தரவுகளையும் இந்த கப்பல் சேகரிக்கும்.

## கடன் தள்ளுபடியால் விவசாயிகளுக்கு நன்மையா?

- ஆரம்பத்தில் ரூ.50,000 வரை பயிர்க்கடன் பெற்ற குறு விவசாயிகளுக்குக் கடன்தொகை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்த நிலையில், இந்த வரம்பு ரூ.75,000 ஆக உயர்த்தப்பட்டது.
- இந்தத் தொகைக்கு மேல் கடன் வாங்கியவர்களுக்கு ரூ.30,000 தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு சிறு குறு விவசாயிகளுக்கு ஓரளவு நன்மை பயக்கும். எனினும், இத்தகைய கடன் தள்ளுபடித் திட்டங்கள் விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும் எதிர்காலக் கடன்படுதல் (Indebtedness) பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வாக அமையுமா?

» கடன் தள்ளுபடியின் வரலாறு

- விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வது என்பது இந்தியாவில் புதிதல்ல, வறட்சி, வெள்ளம் போன்ற காரணங்களைக் காட்டி, பல மாநில அரசுகள் 1987 இல் தொடங்கி பல்வேறு ஆண்டுகளில் சிறிய அளவில் கடன் தள்ளுபடி செய்துள்ளன.
- ஆனால், விவசாயிகளின் அதிக அளவிலான தற்கொலையைக் காரணம் காட்டியும், ராதாகிருஷ்ணா குழுவின் விவசாயிகள் கடன்படுதல் அறிக்கையின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டும், நாடு தழுவிய அளவிலான மிகப் பெரிய கடன் தள்ளுபடித் திட்டம் 2008 இல் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது.
- சிஏஜி தணிக்கை அறிக்கையில் இத்திட்டத்தைப் பற்றிய பல்வேறு முறைகேடுகள் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், அந்தத் திட்டத்தின் மூலம் ஏறக்குறைய 3.69 கோடி சிறு, குறு விவசாயிகளும், 60 லட்சம் இதர விவசாயிகளையும் சேர்த்து ஏறக்குறைய ரூ.60,000 கோடி மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.
- அன்று முதல் இன்றுவரை, பல்வேறு மாநில அரசுகள் விவசாயிகளின் தற்கொலையையும், வருமானப் பிரச்சினைகளையும் முக்கியக் காரணங்களாகக் காட்டிக் கடன் தள்ளுபடி செய்து வருகின்றன.

- 1995-2008 காலக்கட்டத்தில் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 41 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்ட நிலை மாறி, கடன் தள்ளுபடிக்குப் பிந்தைய 2009-2011 காலகட்டத்தில் இந்த எண்ணிக்கை 43 ஆக உயர்ந்ததால், கடன் தள்ளுபடி மட்டும் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முடியாது என அப்போது பேசப்பட்டது.

» லாபமற்ற விவசாயம்

- தேசிய புள்ளியியல் நிறுவனம் (NSO) 2021 இல் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு தமிழக விவசாயக் குடும்பத்தின் பயிர்ச் சாகுபடி மூலமான மாத வருமானம் வெறும் ரூ.2,641 மட்டுமே. அதாவது, இதை வைத்து விவசாயிகளால் குடும்பச் செலவை ஈடுகட்ட முடியுமா?
- நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சாகுபடிச் செலவுகளும், அதற்கேற்றவாறு உயராத விளைபொருள் விலையும், இந்தக் குறைவான வருமானத்துக்கு முக்கிய காரணங்கள்.
- எடுத்துக்காட்டாக, வேளாண் செலவுகள் – விலைகள் ஆணையத்தால் (Commission for Agricultural Costs and Prices - CACP) 1974-75 முதல் 2021-22 ஆண்டு வரை வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி, பயிர்ச் சாகுபடிக்குச் செய்யப்படும் மொத்தச் செலவின் (C2 cost) அடிப்படையில் தமிழ்நாட்டின் விவசாயிகள் நெல் சாகுபடி மூலமாக 15 ஆண்டுகள் மட்டுமே லாபம் ஈட்டியுள்ளார்கள்.
- குறிப்பாக, 2000-01 ஆம் ஆண்டுக்குப் பிறகு, வெறும் மூன்று ஆண்டுகள் மட்டுமே லாபம் கிடைத்துள்ளது. இத்தகைய சூழலில், அரசு தற்போது அறிவித்துள்ள தற்காலிகக் கடன் தள்ளுபடி விவசாயிகளுக்கு ஒரு முறை மட்டுமே உதவும்.
- மீண்டும் சாகுபடி செய்ய அவர்கள் கடன் வாங்கும்போது, அதே லாபமற்ற சூழல் நீடித்தால், அவர்கள் மீண்டும் கடன் வலையில் சிக்குவார்கள். அனைவரையும் உள்ளடக்கிய நிதி வழங்கல் பற்றிய ரங்கராஜன் குழு (2008) அறிக்கையின்படி, இந்தியாவில் 75 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ள சிறு, குறு விவசாயிகளில் 66% பேருக்கு வங்கிக் கடன்கள் கிடைப்பதில் லை.
- அவர்கள் பெரும்பாலும் கந்துவட்டிக்காரர்களிடமே கடன் வாங்குகின்றனர். புதிய அரசின் கடன் தள்ளுபடியானது கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற சிலருக்கு மட்டுமே பயனளிக்கும் என்பதால், கந்துவட்டிக் கொடுமையில் சிக்கும் பெரும்பான்மை யான சிறு விவசாயிகளுக்கு இதனால் பயனில்லை.

» தீர்வுக்கான வழிமுறைகள்

- முதலில், விவசாயிகள் வேளாண் உற்பத்தியில் எதிர்கொண்டுவரும் பிரச்சனைகளைவிட, வேளாண் பொருள்களை விற்பதில் பெரும் பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அரசுத்துறைகள் மூலம் முக்கிய வேளாண் பொருள்களின் கொள்முதலை முடுக்கிவிட வேண்டும்.
- மற்ற மாநிலங்களைப் போல, சந்தையில் வேளாண் பொருள்களின் விலை வீழ்ச்சி ஏற்படும்போது சந்தை தலையீட்டுத் திட்டத்தை (Market Intervention Scheme) செயல்படுத்தி விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும்.
- டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான விவசாயிகள் குழு (National Commission on Farmers, 2006) பரிந்துரைத்தபடி, விவசாய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையைச் (எம்எஸ்பி) சாகுபடிச் செலவைவிட 50% அதிகமாக உயர்த்தி, சிறப்பு நிதி ஒதுக்கி தமிழக அரசு செயல்படுத்த வேண்டும்.
- கொள்முதல் நிலையங்களில் சேமிப்புக் கிடங்கு வசதி இல்லாத காரணத்தால், நெல் அதிகம் சாகுபடி செய்யும் பகுதிகளில், நெல் மூட்டைகள் மழையில் நனைந்து, முளைத்து விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது.
- இதைக் கருத்தில் கொண்டு வேளாண் பொருள்களைச் சேமிப்பதற்கான கிடங்கு வசதிகளை ஒவ்வொரு மாவட்டத்தின் உற்பத்தி அளவைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்த வேண்டும்.
- ஒரு முறை வங்கிக் கடன்களைத் தள்ளுபடி செய்வதால் மட்டும் விவசாயிகளின் கடன்படுதல் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. விளைபொருள்களுக்கு நியாயமான விலையும், பாதுகாப்பான சந்தையும், நிலையான பாசன வசதியும் கிடைக்காதவரை கடன் பிரச்சினை தொடர்ந்து அவர்களை விரட்டும்.
- அரசு அறிவித்துள்ள இந்த விவசாயக் கடன் தள்ளுபடி ஒரு தற்காலிக முதலுதவியே. இதைத்தாண்டி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் ஆக்கப்பூர்வமான நீண்டகாலக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினால் மட்டுமே விவசாயிகளின் கடன் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.




| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |